காப்பாட்சியர் சிவ சத்தியவள்ளி (பொறுப்பு) தெரிவித்தார்.




## மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில்

# வாழ்வாதார பயிற்சி பட்டறை

குழித்துறை, மார்ச்.8-

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி மாணவர் பேரவையும் உன்னத் பாரத் அபியானும் இணைந்து வாழ்வாதாரத்துக்கு வழிகாட்டி என்னும் தலைப்பில் பயிற்சி 10 நாட்கள் நடைபெற்றது. இதற்கு கல்லூரி முதல்வர் பால்ராஜ் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக ஜோசப் வேதமாணிக்கம் கலந்து கொண்டு 14 விதமான கைவினை தொழில்கள் பற்றி பயிற்சி அளித்தார். அதில் 20 பேராசிரியர்களும், 160 மாணவர்களும் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகள் ஒருங்கிணைப்பாளர் பிரீடா மேபல் ராணி தலைமையில் செய்யப்பட்டிருந்தது.